**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | |
|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC 152 of 2024 |

| | |
|---|---|
| Depositions of PW - 2 witness for ________ | Prosecution<br>Defence<br>Court |

Name : முத்துரத்தினம்

Father's Name : பழனிச்சாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மாவட்டம் ஆண்டி நாயக்கன் வலசுவில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த ரத்தினசாமி எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 11.01.2018 ஆம் தேதி இரவு 07.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த பொழுது எனது உறவினர் ரமேஷ் என்பவர் எனக்கு போன் செய்து, எனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் சொன்னார்கள். மேற்படி தகவல் தெரிந்து நான் எனது அண்ணனை பிரியா மருத்துவமனையில் பார்த்த பொழுது காலில் அடிபட்டு சிகிச்சையில் இருந்தார். பின்னர் இரண்டு நாட்கள் எனது அண்ணன் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் இருந்து வந்தவர், திடீரென உடல்நிலை சரியில்லாமல் ஆனதால் அவரை மேல் சிகிச்சைக்காக வேல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அரசு மருத்துவமனைக்கு

கொண்டு செல்லுமாறு கூறியதை தொடர்ந்து, எனது அண்ணனை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் எனது அண்ணன் வரும்வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். பின்னர் எனது அண்ணன் இறப்பு சம்பந்தமாக எனது அண்ணனின் மகன் ரமேஷ் அவர்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் எனது அண்ணனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**